செ.வெ.எண்:70 நாள்:27.03.2019

# பத்திரிக்கைச் செய்தி

குழந்தைகள் நலனை பிரதானமாகக் கொண்டு, பாலின வித்தியாசமின்றி, 18 வயதிற்கு கீழ் உள்ள அனைத்துக் குழந்தைகள் மீதான பாலியல் குற்றங்களுக்கும் போக்ஸோ சட்டத்தின் கீழ் கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம் 2012 (The Protection of Children from Sexual Offenses) (POCSO) Act, 2012) என்பது, இந்தியாவில், பாலியல் குற்றங்களிலிருந்து பாலின வித்தியாசமின்றி, 18 வயதுக்குக் குறைவான அனைத்துக் குழந்தைகளையும் பாதுகாக்க உருவாக்கப்பட்ட சட்டமாகும். இதனைச் சுருக்கமாக போக்ஸோ சட்டம் என்று அழைக்கப்படுகிறது. இச்சட்டம் வரும் முன், குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை, இந்திய தண்டனை சட்டப்பிரிவுகளின் கீழ் பதிவு செய்யப்பட்டது. இப்பிரிவுகள், குழந்தைகள், வயது வந்தவர்கள் என்ற வித்தியாசமின்றி வழக்குகளைக் கையாண்டன.

ஆனால், தற்போது 18 வயதுக்குக் கீழ் உள்ள அனைத்துக் குழந்தைகளும் பாலின வித்தியாசமின்றி, இச்சட்டத்தின் வரையறைக்குள் வருவர். அதாவது ஆண் குழந்தைகள் சிறுவர்களும் பாதிக்கப்பட்டாலும், இச்சட்டம் தலையீடு செய்யும். பாலியல் தாக்குதல் / வன்முறை, பாலியல் துன்புறுத்தல் / சீண்டல், ஆபாசப் படமெடுக்க குழந்தைகளைப் பயன்படுத்துதல் போன்றவற்றைக் குற்றங்களாக இச்சட்டம் முன்வைக்கிறது. இச்சட்டத்தின் கீழ் பதியப்படும் வழக்குகளில், 30 நாட்களுக்குள் குழந்தையின் சாட்சியம் பதிவு செய்யப்பட வேண்டும். ஒரு வருடத்திற்குள் வழக்கு முடிய வேண்டும். தண்டனை நிரூபணம் ஆகும்பட்சத்தில் சாதாரண சிறை தண்டனையிலிருந்து, கடுங் காவல் ஆயுள் தண்டனை வரை கிடைக்க இச்சட்டம் வழிவகை செய்கிறது. சில வகை பாலியல் வன்முறைக்குக் கூடுதல் தண்டனை உண்டு. உதாரணமாக, காவல் துறையினர், பாதுகாப்புப் படையினர், ராணுவம், அரசு அதிகாரிகள் போன்றவர்கள் பாதுகாவலர்கள் அல்லது நம்பிக்கைக்குரியவர்களே குற்றம் இழைக்கும்போது, அதிக தண்டனை உண்டு என இச்சட்டம் தெளிவுபடுத்துகிறது.

இச்சட்டத்தின் கீழ் குழந்தைகளை பாதுகாக்க, சென்னை, உயர்நீதிமன்ற நீதிபதிகள் அடங்கிய போக்ஸோ கமிட்டி மூலம் மாவட்ட அளவில் புகார் பெற காவல்துறை அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கரூர் மாவட்டத்தில் பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம் 2012 (The Protection of Children from Sexual Offenses (POCSO) Act, 2012) என்ற சட்டத்தின் கீழ் மாவட்ட துணை கண்காணிப்பாளர் திரு. S. காமராஜ் அவர்களை 9498159956 என்ற அலைபேசி எண்ணிலும், kamarajsevu@gmail.com, என்ற மின்னஞ்சல் முகவரியிலும் அதேபோல்

காவல் ஆய்வாளர் திருமதி. M. செல்வமலர் அவர்களை 9498107764 என்ற அலைபேசி எண்ணிலும், janasruti05072012@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியிலும் மற்றும் சார்பு காவல் ஆய்வாளர் திருமதி. சத்தியசுதா அவர்களை 9498183111 என்ற அலைபேசி எண்ணிலும், sudhaovi@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியிலும், நேரில் அல்லது தபால் மூலம் தொடர்பு கொண்டும் புகார்களை பதிவு செய்யலாம் என்று சென்னை, உயர்நீதிமன்ற நீதிபதிகள் அடங்கிய போக்ஸோ கமிட்டி தெரிவித்துள்ளது.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.**